[illegible].
ஆண்டு 9 மலர் 1-4
Jan - April 1926.

R673[illegible]
M20.9.1-4
187114

OFFIC... 11 SEP 1920 MADRAS

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் மாதாந்தத்

தமிழ்ப் பத்திரிகை.

"முத்தாந்த வீதி முளரிதோழ மன்பருக்கே
சித்தாந்த வீதிவரும் தேவே பராபரமே"—தாயுமானவர்

தொகுதி கூ. } 1920ஆம் ஜனவரி பிப்ரவரி மார்ச் ஏப்ரல்மீ { பகுதி க, உ. 1 to 4

உள்ளுறை.


| | | |
|---|---|---|
| தசபுராணம் | பத்திராதிபர் | 1 |
| திருவாரூர் நான்மணிமாலை யுரை | " | 3 |
| சமயம் | "ஞானாமிர்தம்" | 9 |
| சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 14-வது நிறைவிழாச்சிறப்பு | | |


பத்திராதிபர்:

கி. குப்புசாமி முதலியார்

சென்னை

செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடம்.

வருடச்சந்தா ரூ 1-4-0.] 1920. [தபாற்கூலி அணா 4.

சித்தாந்த ஆபீசு, இராஜ விலாசம், அம்பட்டன் வாராவதி ரோட், மயிலாப்பூர்.

## தேவாரம்

தமிழ் வேதமாகிய தேவாரமுதற் பெரியபுராண திருமுறைகளிலும், வடமொழி வேதங்களிலும் கூ பிரணவம், விபூதி, உருத்திராக்ஷம், சரியையாதி சாதனையும் இன்னோரன்ன பிறவும் பொருளொற்றுமை தோன், குத்து 112-விஷயங்களாக ஸ்ரீ காசிவாசி-செந்திநாதையர் இயற்றினர். அதனை 54-கொண்ட டிம்மி சைஸ் புத்தக திருவுருவப்படங்களுடன் அச்சிட்டனன். சூரியனூர் கோயில தானம் கொடுத்த வித்துவாபிப்பிராயமாகிய சிறப்புப்பாயிரத்தாலே அருமை பெருமைகள் அறியக்கிடத்தலின் ஈண்டுவரைதல் மிகை விடுத்தேன். இதன் விலை தபாற் சார்ஜ் நீங்கலாக ரூபாய்—3.

## சிவஞானபோதவசனாலங்காரதீபம்.

இந்நூல் டை நூலாசிரியர் இயற்றியது. ஒரு சீடன் சற்குருவை யடைந்து வழிபட்டுச் சிவஞானபோத உண்மையுணர்ச்சியை அடைதற்கு முன்னர் அதிலே பொதிந்துள்ள விடயங்கள் இவையெனத்தானே உபாய ஞானம் வாயிலாக மிகவும் இலகுவில் அறிந்துகோடற்கு ஒவ்வோர் சூத்திரத்தின் இறுதியிலும் வினாக்களும் அவற்றின் விடைகளை உணருமாறு அவற்றின் எண்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பொல்லாப்பிள்ளையார், தக்ஷிணாமூர்த்தி முதலிய 5-படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தபாற் சார்ஜ் நீங்கலாக ரூபாய் 2 8 0.

## மகா வுக்கிர வீரபத்திராஸ்திரம்.

"அத்துவிதப் பிரகாசிகை என்னும் சங்கரத்துவேஷியின் வாய்ப்பூட்டு" என்னும் புத்தகத்தைக் கண்டித்து, நிரவதி வியாபகமுடைய சிவப்பிரமத்திற்கும், சாவதி வியாபகமுடைய ஆன்ம பிரமத்திற்குமுள்ள வித்தியாசங்களைப் பல பலிஷ்ட சுருதிப் பிரமாணங்களாற்காட்டி, சுத்தாத்துவித சைவ உண்மையினை வச்சிர லேபமாகநாட்டி எழுதிய வோர்நூல்.

இதன் விலை அணா 8.

| | | |
|---|---|---|
| சிவலிங்க மகத்துவம் | விலை | 0 4 0. |
| திருநீற்றின் உண்மை | விலை | 0 4 0. |

சி. ஏகாம்பர முதலியார்.
24, சாம்பண்டாரம் வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.


சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்

## சைவ சித்தாந்த மகாசமாஜத்தின்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

---

எட்டாந் தொகுதி.

பத்திராதிபர்

கி. குப்புசாமி முதலியார்.

---


சென்னை:

செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடம்.

1919.

## ்தாகுதியின் உள்ளுறை.


| | | |
|---|---|---|
| ... | பத்திராதிபர் ... | 73 |
| ... | ” ... | 169 |
| ... | சீர்திருத்தம் ... | 30 |
| ள் ஓர் பாசுரம்... | கா. சுப்பிரமணிய பிள்ளை M.A.,M.L., ... | 5 |
| நிர்ணய சங்கிரகம்.. | வி. குஞ்சிதபாதம் பிள்ளை. | 33, 100, 139, 152, 178, |
| தே ன போதோற்பத்தி | ... ச. சபாரத்தின முதலியார். | 61, 77 |
| ஞானம் | ... ” ” ... | 44 |
| சிவலிங்கம் | ... துடிசை கிழார் அ. சிதம்பரனார் ... | 88 |
| சூரசங்காரவிளக்கம் | ... "பாலசந்திரன்" ... | 189 |
| சைவசித்தாந்த மகா சமாஜத்தின் பதினன்காவது அறிக்கைப் பத்திரம். | ... | 241 |
| ” ” ” | பதின்மூன்ருவது நிறைவிழாச் சிறப்பு ... | 18 |
| தசபுராணம் | ... பத்திராதிபர் ... | 25, 49, 97, 121, 145, 193, 217. |
| திரிமூர்த்திகளுக்கு விசுவரூபங் காட்டியது | ... கி. இராஜாராமணியார். | 58 |
| திருவாரூர் நான்மணிமாலை யுரை | பத்திராதிபர் ... | 113, 123, 147, 173, 201. |
| தூர்வையாசகப் படலம் | ... கி. இராஜாராமணியார். | 93, 119, 142. |
| நன்மை தீமை யறியுமரம் | ... J. M. நல்லசாமிப்பிள்ளை. | 18, 52. |
| நால்வர் ஆனந்தக் களிப்பு | ... வித்துவான் கா. சபாபதி முதலியார். | 207. |
| பகவத்கீதை | ... கா. சுப்பிரமணிய பிள்ளை M.A.,M.L.,... | 84. |
| பதிபசுபாச விளக்கம் | ... க. வேலுப்பிள்ளை. ... | 163, 212. |
| பணிசெயல் | ... பத்திராதிபர். ... | 1 |
| பிறவிப்பெரும்பயன் | ... S. நடேசதேசிகர். ... | 9 |
| மதிப்புரை | ... சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை. ... | 167, 214. |
| முப்பொருளாராய்ச்சி | ... | 127, 157, 161, 185, 195, 237. |
| வேதசிவாகமங்கள் | ... ச. சபாரத்தின முதலியார். | 221. |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்

தொகுதி ௩. | 1920௵ ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், | பகுதி ௧, ௨.

## தசபுராணம்.

" நலமலிமங்கை நங்கை விளையாடியோடி நயனத்தலங்கள் காமா
உலகினையேழு முற்று மிருள்மூட மூடவிருளோட நெற்றியொருகண்
அலர்தரவஞ்சி மற்றைநயனங்கை விட்டுமடவாளிறைஞ்சமதிபோல்
அலர்தருசோதி போலவலர்வித்த முக்கணவனு நமக்கோர் சரணே."

(இ - ள்.) நலமலிநங்கை மங்கை - நலமிகுந்த நங்கையாகிய உமாதேவியார், விளையாடி - பலவிதத் திருவிளையாடல்களைச்செய்து, நயனத்தலங்கள் - பெருமானது திருக்கண்களாகிய இடங்களை, ஓடி மூட - விரைவாகச்சென்று மூடுதலும், (அதனால்) ஏழு உலகினை - ஏழுலகங்களையும், முற்றும் - முழுவதும், இருள்மூட - இருளானது - மூடிக்கொள்ள, இருள் ஓட - அம்மூடிய இருளானது நீங்க, நெற்றி ஒருகண் - நெற்றியில் ஓர் திருநயனத்தினை, அலர்தர - விழிப்ப, அஞ்சி - பயந்து, மற்றை நயனம் - தாம் மூடியிருந்த மற்றைய திருக்கண்களை, விட்டு - விட்டு விட்டு, மடவாள் - உமாதேவியார், இறைஞ்ச - வணங்க, மதிபோல் - சந்திரனைப்போலும், அலர்தரு சோதிபோல் - மிகப்பிரகாசித்த சூரியனைப்போலும், அலர் உற்ற - திருக்கண்கள் திறந்த, அமைந்த, முக்கண் அவனும் - திரிநேத்திரதாரியாகிய சிவபெருமான், நமக்கு - அடியேங்களுக்கு, ஓர்சரண் - ஓர் அடைக்கலப்பொருள் ஆவன். ஏ — அசை.

ஒருகாலத்து உமாதேவியர் லீலா மாத்திரமாக இறைவனை நோக்கி "ஓ எம்பெருமானே! சூரிய சந்திரர்களாவார் யாவரென வினவலும், பெருமான் 'அவ்விருவரும் நம்முடைய கண்கள்' என்று திருவாய் மலர்ந்தனர். அதனைத் திருச்செவி யேற்றாராகிய உமாதேவியார் உண்மை யறியும் பொருட்டுப் பெருமானது

இரண்டு திருவிழிகளையும் தமது இரண்டு திருக்கரங்களால் மூடினர். மூடுதலும் எழுலகமும் இருட்பிழம்பையே உருக்கிப்பூசியது என இருண்டுவிட்டன. அதனால் எவ்வுயிர்களும் யாதும் செய்வதற்கில்லாமல் வருந்தின. பிறகு இந்திரன் முதலிய தேவர்கள் இறைவனிடஞ்சென்று தமது துன்பத்தை முறையிட்டுக்கொண்டனர். உடனே அவர்களையெல்லாம் பயப்படாதீர்களெனத் தமது திருக்கரத்தால் அமர்த்தி தமது நெற்றித்திருவிழியைத் திறந்தனர். அதனால் உலகேழும் மூடியிருந்த விருளகன்றது. பன்னிருகோடி சூரியர் உதயஞ்செய்ததுபோல் ஒளி நிறைந்தது. திருக்கண்களை மூடியிருந்த உமாதேவியாரும் மிகப்பயந்து தமது திருக்கரங்களை எடுத்துக் கொண்டனர். பிறகு உமாதேவியார் இறைவனைப் பன்முறை வணங்கி "ஓ! எம்பெருமானே! தேவரீர் திருக்கண்களைமூடி உயிர்கட்குத்துன்பம் நேரும்படிச்செய்த எனது பாவம் நீங்க ஓர் உபாயம் அருளல்வேண்டும் என்று கேட்டனர். இறைவனும் "ஓ உமையே! நீ செய்த செயலால் உனக்கு ஒரு பாவமும் அணுகாதாயினும் உலகோர்க்குத் தவத்தின் தன்மை இதுவென உணர்த்த நீ தவம் புரிதல் கூடும். அத்தவத்திற்கு உரிய இடம் காஞ்சிமாநகரேயாகும்." என இறைவன் திருவாய் மலர்ந்தனர். பிறகு உமாதேவியார் இறைவனிடத்து விடைபெற்றுக் காஞ்சிமாநகருக்கு எழுந்தருளி அங்கு ஒருமாவின் கீழிருக்கும் பெருமானைப்போற்றித் திருக்கம்பாநதியிற்சென்று மணலைக்குவித்துச் சிவலிங்கத்திருவுருவை அமைத்துப் பூசை புரிவாராயினர். அவ்வம்மையாரின் உறுதியை உலகோர் அறியப் பெருமான் கங்காநதியைப் பிரவாகமாக எதும்படிச் செலுத்தினர். சமுத்திரத்தின் பெருக்கெனஓடிவந்த கங்கையின் விசையைக்கண்டாராகிய உமாதேவியார் தமது இரண்டு திருக்கரத்தாலும் இரண்டு திருத்தன பாரங்களாலும் தழீஇக்கொண்டனர். தழுவிய விசையால் அம்மையாரது வளைத்தழும்பும் முலைத்தழும்பும் பெருமான்மீது நேரும்படிப் பெருமான் திருவுளம் உருகிக்குழைந்தனர். விசைகொண்டோடிய கங்கையும் அச்சிவலிங்கப் பெருமானையும் அம்மையாரையும் வலங்கொண்டு சுற்றி ஓடியது. சிவபெருமானும் இடபாரூ[illegible]ங்கு காட்சி தந்தனர். தேவர்கள் பூமழை பொழிந்தனர். பிறகு உமாதேவியார் திருவுளப்படிப் பெருமானும் அவருக்கு இடப்பாகந்தந்தருளினர். இதுவே புராண கதையாகும்.

பத்திராதிபர்.

# திருவாரூர் நான்மணிமாலை யுரை.

---

(சித்தாந்தம் 8-ம் தொகுதியின் 206-ம்பக்கத் தொடர்ச்சி.)

நேரிசை வெண்பா.

நல்லார் தொழுங் கமலை நாதனே நாதனெனக்
கல்லாதார் சொல்லுங் கடாவிற்கு—வெல்லும்
விடையே விடையாக மெய்யுணரா ரையுற்
றிடையே மயங்குமிது வென்.

(இ - ள்.) நல்லார் தொழும் - நல்லவர்களால் வணங்கப்படும், கமலை நாதனே - இலக்குமி கணவனாகிய விஷ்ணுமூர்த்தியே, நாதன் - உலகத்துக்கு ஆதிபகவன், என-என்று, கல்லாதார்-ஞான நூல்களைக் கற்று மெய்யுணர்வில்லாதார், சொல்லும் - வாதிடுகின்ற, கடாவிற்கு - வினாவாகிய வாதத்திற்கு, வெல்லும்-வெற்றி கொள்ளுகின்ற, விடையே-மால் விடையே, விடை ஆக-பதிலாக இருக்கவும், மெய் உணரார்-உண்மையை யுணராதார், ஐ உற்று - ஐயமுற்று, இடையே - நடுவில், மயங்கும் - மயங்குகின்ற, இது என் - காரணம் என்ன என்றவாறு.

விந்துவின் கலையை யெழுப்பி உலகத்தை விரியச்செய்யும் சத்தியை யுடையானாகிய பகவனே உலகத்துக்கு நாதன் என்று மெய்யுணர்வோர் கூறுதலும் அதனை யறியாது பசுக்களில் ஒருவராய விஷ்ணு மூர்த்தியே நாதன் என்று அறியாதார் கூறும் கூற்றுப் பொருள் சேர்ந்த புகழாக இல்லாமையால் அவ்விஷ்ணு மூர்த்தித் திரிபுர மெரித்த காலத்து விடையாக நின்று தாங்கியதே பரமசிவன் ஆண்டானென்றும் விஷ்ணுமூர்த்தி அடியவனென்றும் காட்சி யளவை யான் அறியக் கிடக்கின்றது என்பார் 'விடையே விடையாக' என்று அருள் செய்தனர். பொருளல்லாதவற்றைப் பொருள் என எண்ணி அம்மருளால் மாட்சிமைப்படாத பிறப்பினையுடைய இருப்போரே இவ்விதம் மயங்குவர். மெய்யுணர்ந்தார் மயங்கார். ஆகம அளவையும் பிரமாண அளவையும் இதற்கு வேண்டாஎன்று அருள் செய்ய வந்தவர் 'மெய்யுணரார் ஐயுற்று இடையே மயங்கும் இதுவென்' என்று அருள் செய்தனர்.

### கட்டளைக் கலித்துறை.

இதுவே பொருளென் றெவரெவர் கூறினு மேற்பதெது
வதுவே பொருளென் றறிந்து கொண்டேனப் பொருளெவர்க்கும்
பொதுவே யென்றாலும் பொருந்து மெல்லோர்க்கும் பொதுவினிற்கு
மதுவேய் மலர்ப் பொழிலாரூரினும் வைகும் வைகலுமே.

(இ-ள்.) இதுவே பொருள் - உண்மைப்பொருள் இதுவே, என்று எவரெவர் கூறினும் - என்று எவ்விதத் தகுதியுடையவர் சொல்லினும், ஏற்பது எது - உண்மையறிவிற்குப் பொருந்துவது எது, அதுவே - அப்பொருளையே, பொருள் என்று - நிலையுடைய பொருள் என்று, அறிந்து கொண்டேன் - உண்மையைத் தெரிந்துகொண்டேன், அ - அந்த, பொருள் - உண்மைப்பொருள், எவர்க்கும் - யாவர்க்கும், பொதுவே யென்றாலும் - பொதுவானது என்றாலும், பொருந்தும் - பொருத்தமுடையதாகும். (ஏனெனில்) எல்லோர்க்கும் - யாவருக்கும், பொதுவில் - பொதுவாகிய இடத்தில், நிற்கும் - அப்பொருள் நிலைக்கும், (அன்றியும்) மதுவேய் - தேன் பொருந்தும், மலர் பொழில் - மலர்ச்சோலைகளையுடைய, ஆரூரினும் - திருவாரூரிலும், வைகலும் - எக்காலத்தும், வைகும் - பொருந்தியிருக்கும்.

வீட்டிற்கு நிமித்தகாரணமாகிய முதற்பொருளை உணர்தற்கு உபாயமாகிய கேள்வி விமரிசம் பாவனையாகிய மூன்றினையுங்கொண்டு அளவைகளாலும் ஒழுகுமாற்றாலும் தெளிய ஆராய்ந்து முதற்பொருளிதுவென வுணர்ந்து நின்றவரே மெய்ப்பொருள் கண்டவராதலால் அதுவிட்டுப் பொருள் தோறும் கற்பனைகளைக் கற்பித்து நின்ற வுண்மையைப் பொதுவாகக் காணாது தம்மதமேற்கொண்டு பொது வுணராது கூறுகின்றோர்கள் எவ்வித தருக்க வாதிகளாயினும் அவர் மொழி யேற்பதற்கு இல்லை யென்பார் 'இதுவே பொருளென்று எவரெவர் கூறினும் ஏற்பது எது அதுவே பொருளென்று அறிந்துகொண்டேன்' என்று அருள் செய்தனர். எத்தகைய மதத்தினர் எவ்வித தெய்வங் கொண்டாராயினும் 'தோற்றங் கேடுகளின்மையின் நித்தமாய் நோன்மையால் தன்னை யொன்றுங் கலத்தல் இன்மையின் தூய் தாய் தானெல்லாவற்றையுங் கலந்து நின்றும் விகாரமன்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத் தாதலாய்,' நின்ற முதற்பொருள் ஒன்றினையே அவர் வழுத்தும் வழுத்துப்போய்ச் சாருமாதலால் அப்பொருள் எவர்க்கும் பொதுவே யென்றாலும் பொருந்தும்' என்று அருள் செய்ததாஉம். அன்றியும் புன்முதல் மலையீறாகவுள்ள நிலைத்திணையும் எறும்பு முதலிய கடைசியாகவுள்ள இயங்கு திணையுமாயுள்ள ஆன்மாக்களையே தனக்கு இடமாகப் பொருந்தி நிற்கின்ற நிலையுடையவனாதலால் அப்பொதுமை நோக்கியுங் கண்டார் கண்டவுடன் வீடுபேற்றினைத் தரும் உலகத்திற்கு இருதய கமலமும் பொதுவென்னும் திருநாமமும் பெற்ற பொற்சபையையுடைய ஸ்ரீ சிதம்பரத்தின் கண் ஆன்மார்



க்குய்யும் வண்ணம் ஆனந்தத்தாண்டவத்தைச்செய்து அருளுவது கண்டும் 'எல்லோர்க்கும் பொதுவில் நிற்கும்' என்று அருள் செய்தனர்.

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வையமுழுது முழுதுண்ண வல்லாற்களித்து நவநிதியுங்
கையிலொருவற் களித்தெமக்கே கதிவீடளித்தோர் கன்னிகைக்கு
மெய்யிலொருகூறளித்தனரால் விமலர் கமலைத் தியாகரென்ப
தையரிவர்க்கே தகுமுகமன் அன்று புகழுமன்றுமே.

(இ-ள்). வையமுழுதும் - பூமிமுழுவதையும், முழுதும் உண்ண - ஒருங்கே உணவு கொள்ள, வல்லாற்கு - வல்லவனாகிய ஸ்ரீ விஷ்ணு மூர்த்திக்கு, அளித்து - கொடுத்து, நவநிதியும் - ஒன்பது விதமாகிய நிதிகளையும், கையில் - அருகே யிருக்க, ஒருவனுக்கு - குபேரனுக்கு, அளித்து - கொடுத்து, எமக்கே - பிறவிகடோறும் அடிமை பூண்ட எமக்கே, கதி வீடு அளித்து - கதியைத் தரும் வீடாகிய அவன் திருவடியை யளித்து, ஓர் கன்னிகைக்கு—ஒப்பற்ற கன்னிகையாகிய இமயவர்த்தனிக்கு, மெய்யில் - திருமேனியில், ஒரு கூறு - ஒரு பங்காகிய இடப்பாகத்தினை, அளித்தனரால் - திருவருள் செய்தாராதலால், விமலர் - நிர்மலராகிய, கமலைத்தியாகர் - திருவாரூரிலெழுந்தருளிய தியாகராயர், என்பது - என்று கூறுவது, ஐயர் - தலைவராகிய, இவர்க்கே - இப்பெரியோர்க்கே, தகும் - தகுதியுடையதாகும் (இவ்விதம் உலகோர் கூறுவது) முகமன் அன்று - உபசாரவார்த்தைகளும் அன்று, புகழும் அன்று - புகழ்வதும் அன்று, ஆம் - உண்மையேயாகும்.

காப்புத் தொழிலைச் செய்யும் விஷ்ணுமூர்த்திக்கு உலக முழுவதையும் தம் சத்தியின் வழியாகத் தோன்றச் செய்துகொடுத்தாரென்பது தோன்ற 'வையமுழுது முழுதுண்ணவல்லார்க்கு அளித்து' என்றனர். குபேரனைத் தோழமைகொண்டு அவன் தவத்திற்கு ஏற்ப எல்லாச் செல்வங்களையுந் தந்தனர் என்பது போதர 'நவநிதியுங்கையி லொருவற்கு அளித்து' என்றனர். நில்லாதனவாய செல்வத்தினையும் அச்செல்வத்தாலாய போகத்தையும் அதை யனுபவிக்கும் யாக்கையையும் பெரும்பான்மையும் பற்றுச் செய்து இடர்க்கடலுளழுந்தும் புல்லறிவாளர் அல்லாதாருக்கு அவன் திருவடிச்செல்வத்தையே தந்து அருளுவர் என்பது போதர 'எம்க்கே கதி வீடளித்து' என்றனர். 'சத்திதன் வடிவேதென்னில் தடையிலாஞானமாகும்' என்றபடி ஞானவுருவினனாகிய அவன் ஞானமயமாகிய பராசத்தியைத் தம்மிடத்தே யுடையான் என்பது போதர 'ஓர் கன்னிகைக்கு மெய்யிலொரு கூறளித்து' என்றனர். 'வேண்டுதல் வேண்டாமையிலா' னாதலாலும் தனக்குவமையில்லாதானாதலாலும் 'விமலர் கமலைத்தியாக ரென்பது ஐயரிவர்க்கே தகும்' என்றனர்.

நேரிசை யாசிரியப்பா.

ஆமையோடணிந்து தலையோடேந்திக்
காமருமடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந்துண்ணினு முண்ணுமொலிகழற்
பைந்துழாய்முகிலும் பழமறைவிரிஞ்சனு
மிந்திராதியரு மிறைஞ்சினர்நிற்ப
மற்றவர்பதங் கண்மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச்செகுத்து முற்றவர்த்தாங்கியும்
பாசுநர்பாசப் பணிகுனர்பணிய
வரசுவீற்றிருப்பினு மிருக்கு முரைசெயின்
யோகசாதனம் போகி கட்கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ்சூடி விருப்புடை
யிடப்பான் மடந்தைநொடிப் போழ்துதணப்பினு
மடலூர் குறிப்புத்தோன்ற விடலருங்
காமமீதூர வேமுற்றிரந்தவ
டாமரைச்சீறடி தைவந்தம்ம
புலவியிற்புலந்துங் கலவியிற்களித்தும்
போகமார்ந்திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தாவொண் பொருள் கைவந்து கிடைப்ப
ஞானமுத்திரை சாத்தி மோனமோ
டியோகு செய்திருப்பினு மிருக்கு மீகெழு
தபனியமாடத் தாமியமுற்றத்
தைங்கணைக் கிழவனாகிய னடாத்துக்
கொங்கையால்களிறுங் கொலைக்கண் வாட்படையுஞ்
சில்காழல்குல் வெல்கொடித்தேரும்
பல்வகையுறுப்பும் படையுறுப்பாகப்
பவக்குறும் பெறியுந்தவக் குறும்பெறிந்து
நுணங்கிய நுசுப்பின ணங்கனார்குழுமிக்
கைவகுத்திருந்து கழங்கெறிந்தாட
மையுண்கண் கண்மறிந் தெழுந்தலமால்
செம்முகத்தாமரைச் சிறையளிக்குலங்க
ளப்பெண் காந்தளினளிக் குலமார்த் தெழக்
கலந்து மன்றழீஇக் காமுறனிகர்க்கும்



பொலன்செய் வீதிப்பொன் மதிற்கமலை
யண்ணன் மாநகர்க் கண்ணுறுதற் கடவுள்
கற்பனை கழன்று நிற்றலி
னிற்பதிந் நிலையெனு நியமமோ வின்றே.

(இ-ள்). ஆமை ஓடு அணிந்து-கூர்மாவதாரங்கொண்ட விஷ்ணு மூர்த்தியின் ஓட்டினை யணிந்து, தலையோடு ஏந்தி-பிரமகபாலத்தைக் கையினில் ஏந்தி, காமரு-அழகு தங்கிய, மடந்தையர் - பெண்கள், கடைதொறும் கடைதொறும்-கடைகள் தோறும், பலிதேர்ந்து-பிச்சையேற்று, உண்ணினும் உண்ணும் - திருவமுது செய்யினும் செய்யும், ஒலிகழல் - ஒலிக்கின்ற வீரகண்டையை யணிந்த, பைந்துழாய் முகிலும் - பசியதுழாய் மாலையை யணிந்த விஷ்ணுமூர்த்தியும், பழமறைவிரிஞ்சனும் - பழமையாகிய வேதங்களால் கூறப்பட்ட பிரமனும், இந்திராதிகளும் - இந்திரன் முதலாகச் சொல்லப்பட்ட தேவர்களும், இறைஞ்சினர் - வணங்கினராய், நிற்ப - நிற்றலும், அவர் பதங்கள் - அவ்விஷ்ணுமூர்த்தி முதலானோர் பதங்களை, மாற்றியும்-மாறுபடச் செய்தும், வழங்கியும் - கொடுத்தும், பற்றலர் - தன்னை வழிபடாதவர்களை, செகுத்தும் - விரோதித்தும், உற்றவர் - வழிபடும் அடியவர்களை, தாங்கியும்-வேண்டுவன கொடுத்துத் தாங்கியும், பாசுநர் பாச - துதிப்பவர் துதிக்க, பணிகுநர் பணிய - வணங்கி நிற்போர் வணங்கி நிற்ப, அரசு வீற்றிருப்பினும் - கொற்றவனாகவிருப்பினும், இருக்கும் - இருப்பன், உரை செயில் - சொல்லப்புகின், யோகசாதனம் - யோகப் பயிற்சி, போகிகட்கு - போகத்தை விரும்புவோர்க்கு, இன்மையில் - இல்லாததால், செஞ்சடைவிரித்து-சிவந்த சடையினை விரித்து, வெண் பொடி பூசி - வெண்மையாகிய பூதியினையணிந்து, எருக்கம் கண்ணியும் சூடி - எருக்குமாலையினையும் அணிந்து, இடப்பால் - இடப்பக்கத்தே, விருப்புடை மடந்தை - விருப்பத்தோடு கூடிய தேவியார், நொடிப்பொழுது - நொடிக்கின்ற காலம், தணப்பினும் - விட்டு நீங்கினும், மடல் ஊர் குறிப்பு - மடலேறுங் குறிப்பானது, தோன்ற - காணப்பட, விடல் அரும் - விடுதற்கு அரிய, காமம் மீதூர-காமம் அதிகரிக்க, எம் உற்று இரந்து - மயங்கி யாசித்து; அவள் தாமரைச்சீறடி - அவ்வம்மையாரது தாமரைபோன்ற சிறிய திருவடிகளை; தைவந்து - தடவி, புலவியிற்புலந்தும் - ஊடலில் ஊடியும், கலவியில் களித்தும் - கூடலில் மகிழ்ந்தும், போகம் ஆர்ந்து - போகம் துய்த்து, இருப்பினும் இருக்கும் - இருக்கினும் இருக்கும், யோகிகட்கு எய்தா - யோகிகள் அடையாத, ஒள் பொருள் - ஒளிதங்கிய பரம் பொருள், கைவந்து கிடைப்ப - சாதனமடைய, ஞானமுத்திரை சாத்தி - சின் முத்திரைதாங்கி, மோனமோடு - மௌன நிலையோடு, யோகு செய்து - யோகத்தைச்செய்து, இருப்பினும் இருக்கும் - இருக்கினும், இருக்கும். மீகெழு - மேலெழுகின்ற, தபனியமாடத்து -

பொன்னாலாகிய மாடத்தில், அரமியமுற்றத்து - நிலாமுற்றத்து, ஐங்கணைக் கிழவன் - ஐந்து புட்ப பாணங்களையுடைய மன்மதன், அரசியல் நடாத்த- அரசினைச்செய்ய, கொங்கைமால் களிறும் - கொங்கைகளாகிய மதங்கொண்ட யானைகளும், கொலைக்கண் - கொலைக்குரிய கண்களாகிய, வாள் படையும்- வாளாயுதங்களும், சில்காழ் அல்குல் - மேகலையணிந்த இடை, வெல்கொடித் தேரும்-வெல்லுகின்ற கொடியையுடையதேரும், பல்வகையுறுப்பும்-மற்றைப் பலவகையாகிய உறுப்புகளும், படை உறுப்பு ஆக-படைகளின் அங்கங்களாக இருக்க, பவக் குறும்பு எறியும் - பவச்செயலை நீக்கும், தவக்குறும்பு எறிந்து- தவமாகிய குறுநில மன்றை வீசி, நுணங்கிய நுசிப்பின் - வணங்கிய இடையின், அணங்கு அனார்-தெய்வமகளிரை யொத்த பெண்கள், குழீஇ - கூடி கைவகுத்து இருந்து - ஒவ்வோர் கூட்டங்களாக இருந்து, கழங்கு எறிந்து ஆட - கழங்குக்காய்களை வீசியாட, மை உண் கண்கள் - மைபூசிய கண்கள், மறிந்து எழுந்து அலமரல் - மறித்தெழுந்து சுழலுதல், செம்முகத்தாமரை- சிவந்த முகமாகிய தாமரையில், சிறையளிக்குலங்கள் - சிறகுகளோடு கூடிய வண்டுக்கூட்டங்கள், அமென் காந்தளில்-அந்த மிருதுவாகிய காந்தள் மலரில், அளிக்குலம்-வண்டுக்கூட்டங்கள், ஆர்த்து எழ - சப்தித்து எழ, கலந்து-கூடி, மன்தழீஇ-மிகுதியும் தழுவிக்கொண்டு, காமுறல்-மகிழ்தலை, நிகர்க்கும்-ஒத்து இருக்கும், பொலன் செய்வீதி - பொன்னாற்செய்ததுபோலும் வீதிகளையுடைய, பொன்மதில் கமலை-அழகிய மதில்கள் சூழ்ந்த திருவாரூரென்னும், அண்ணல் மாநகர்-பெருமைவாய்ந்த பெரிய பட்டினத்தில், கண்ணுதற்கடவுள்-நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன், கற்பனை கழன்று-கற்பனை கடந்து, நிற்றலின் நிற்பது-நிற்றலில் நிற்பது, இன்னிலை - இதுதான்நிலை, எனும்- என்னும், நியமமோ - நியமமாகுமோ, இன்று – இல்லை. மற்று, ஏ–அசை. இதனைப் பின்வரும் சித்தியார் திருவிருத்தத்தினால் உணர்க.

> “போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்
> யோகியா யோகமுத்தி யுதவுதலதுவு மோரார்
> வேகியானாற் போற்செய்த வினையினை வீட்டலோரார்
> ஊகியாமூடரெல்லா மும்பரினொருவனென்பர்.”

---

பத்திராதிபர்.

# சமயம்

---

திருச்சிற்றம்பலம்.

> வாழ்கவந்தணர் வானவரானினம்
> வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
> ஆழ்கதீயதெல்லா மரனாமமே
> சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

> தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
> எம்மை யுடைமை யெமையிகழார் - தம்மை
> யுணரா ருணரா ருடங்கியைந்து தம்மிற்
> புணராமை கேளாம் புறன்.

சமயமாவது மனிதர்கள் அறிவு விளக்கம் பெற்று உறுதி யெய்தி இன்பவாழ்வு அடைதற்குச் சாதகமாயுள்ள ஞானாலயமாம்.

சமயம் காணப்படும் அசேதனப் பிரபஞ்சமாகிய உலகத்தின் சொரூபத்தினையும், அதுபோலக் காட்சியினால் எளிதில் அறிய வாராது அநுமானப் பிரமாணத்தினால் ஊகித்து இனிது அறிய நிற்கும் சேதனப் பிரபஞ்சமாகிய ஆன்மாக்களின் சொரூபத்தினையும், முழுமுதற் கடவுளாகிய பரமான்மாவின் சொரூபத்தினையும், ஐய விபரீதமில்லாமல் தெளிவாகக் காட்டும் ஞான தீபமாம். சமயம் மனிதர் சரீர சுகத்திற்கும் ஆன்ம சுகத்திற்கும் அநுகூலமாகும் நன்மைகளை விதித்து, அவ்விரண்டு சுகத்திற்கும் பிரதிகூலமாகும் தீமைகளை விலக்கி, அவரைக்காக்கும் ஞான அரணாம். சமயம் மனிதர் தாம் பெறுங் கல்வி, செல்வம், அதிகார முதலிய பேறுகளுக்கு ஏற்கும்படி தாரதம்மியம் பெற்று அன்பு செய்து அளவளாவி வாழுதற்குரிய லௌகிக வைதிக ஒழுக்கங்களைப் போதிக்கும் நீதிநிலயமாம். சமயம் மனிதர்களுக்குக் கருமசாதனங்களை அறிவிக்கும் தந்திர கலாரூபமாம். சமயம் மனிதர்களுக்குத் தெய்வ உபாசனைகளைத் தெரிவிக்கும் மந்திர கலாரூபமாம். சமயம் மனிதர்க்கு நித்தியா நித்திய வஸ்துவிவேகத்தினை உணர்த்தும் உபதேச கலாரூபமாம். சுருங்கச் சொல்

லின், சமயம் மனிதர்களுடைய இகபர சுகங்களுக்கு இன்றியமையாத சாதகங்களெல்லாவற்றினையும் அவர்களுக்குக் குறைவறக்கொடுக்குஞ் சர்வ சத்தப் பிரமரூபமான ஒரு கற்பகத்தருவெனப்படும்.

சமயம் முதற்கடவுள் நிறுத்தியதும், முதற்கடவுள் ஆணையினால் தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்தியனவும், கலைஞான சித்தியுடையோர் நிறுத்தியனவும், பிராகிருத விசேடபுத்திமான்கள் நிறுத்தியனவும், பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுத்தியனவுமெனப் பலவகைப்படும். முதற்கடவுள் நிறுத்திய சமயம் மேற்சொல்லிய இலக்கணங்களும் அவைபோல்வனவுமாகும் நலங்கள் பிறவும் ஒருங்குடையதாய்த் திரிபின்றி மற்றைச் சமயங்கள் சொல்லும் பொருள்களெல்லாம் தன்னிடத்தடங்கக்கொண்டு விளங்கும் பூரண மார்க்கமாம். மற்றைத் தத்துவஞான சித்தியுடையார் முதலியோர் நிறுத்திய சமயங்களெல்லாம் ஒவ்வோர் வகுப்பினராயுள்ள அதிகாரிகளுக்கே உரியனவாய்க் காலந்தோறும் தன்மை வேறுபட்டுவரும் ஏகதேச மார்க்கங்களாம்.

இனிப் பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுத்திய சமயங்களை நோக்கப் பிராகிருத விசேடபுத்திமான்கள் நிறுத்திய சமயங்கள் வியாபகமாம். பிராகிருத விசேட புத்திமான்கள் நிறுத்திய சமயங்களைநோக்கக் கலைஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்கள் வியாபகமாம். கலை ஞானசித்தியுடையார் நிறுத்திய சமயங்களைநோக்கத் தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்திய சமயங்கள் வியாபகமாம். தத்துவஞான சித்தியுடையோர் நிறுத்திய சமயங்களை நோக்க முதற்கடவுள் நிறுத்திய சமயம் வியாபகமாம்.

இனி முதற் கடவுள் நிறுத்திய சமயம் சமய அரசான அதீத சமயமெனவும், தத்துவஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்கள் அகச்சமயங்களெனவும், கலைஞான சித்தியுடையார் நிறுத்திய சமயங்கள் அகப்புறச் சமயங்களெனவும், பிராகிருத விசேடபுத்திமான்கள் நிறுத்திய சமயங்கள் புறச் சமயங்களெனவும், பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுத்திய சமயங்கள் புறப் புறச்சமயங்களெனவும், அறிஞரால் வழங்கப்படும்.

இனி முதற்கடவுள் நிறுத்திய சமயம் ஒன்றேயாம். ஏனையோர் நிறுத்திய சமய வகைகள் நான்கும் ஒவ்வொரு வகையிற்



பல பகுதியுடையனவாய் அப்பகுதியுள்ளும் ஒவ்வொரு பகுதியிற் பற்பல பேதமுடையனவாய் விரிந்து நடக்கும். இன்னும், மேன்மேற் சமயங்களை நோக்கக் கீழ்க்கீழ்ச் சமயங்கள் பொய்யாய்க் காணப்படும்; அங்ஙனமாயினும், ஒவ்வொரு சமயங்களும் ஒவ்வோர் வகுப்பினராகிய அதிகாரிகளின் பொருட்டு வேண்டப்பட்டுப் பயன்படுவனவாகிச் சத்தியமாகவே போற்றிக் கோடற்பாலனவாம். உண்மையாகப் பார்க்குமிடத்து இறைவன் நிறுத்திய சமயமே எல்லாப்படியினாலுஞ் சத்தியமாம். ஏனையோர் நிறுத்திய சமயங்கள் மேன்மேல் நோக்கச் சத்தியமிருந்தும் கீழ்க்கீழ்நோக்கச் சத்தியங் குறைந்துங் காணப்படும். அதுவன்றி முழுதும் அசத்தியமாய்க் காணப்படுஞ் சமயம் ஒன்றும் இல்லையென்க.

கீழ்ச் சமயங்களில் நிற்பவர் அவைகள் சொல்லும் அறங்களை வழுவாது அநுட்டிப்பின், அந்த அநுட்டான பலத்தினால் மேற்சமயஞ் சார்ந்து, இப்படியே இறுதியில் முதற்கடவுள் நிறுத்திய அதீத சன்மார்க்கம் எய்தப்பெற்று, அது சொல்லும் ஞான சாதனங் கடைப்பிடித்து அநுட்டித்துத், தத்துவ ஞானசித்தி கைகூடிப் பரமுத்தி எய்துவர். இந்த நியாயத்தினால், மற்றைச் சமய கோடிகளெல்லாம் பரம்பரையில் முத்திக்கு வாயில்களாமென்றும் முதற்கடவுள் நிறுத்திய அதீத அருள்மார்க்கம் சாக்ஷாத்தாகவே முத்திக்கு வாயிலாமென்றும் அறிக. இன்னும், மற்றைச் சமய கோடிகளெல்லாம் இறைவன் அருட்சன்மார்க்கத்தினை அடைவித்தலாகிய முக்கியப் பிரயோசனத்தினைத் தருதலேயன்றி ஒவ்வோர் புண்ணிய லோகப் பிராப்தியாகிய அவாந்தரப் பிரயோஜனங்களையும் தனித்தனி தரவல்லனவாம்.

புறப்புறச் சமய பேதங்களும், புறச்சமய பேதங்களும், அகப்புறச் சமயபேதங்களும், முதற்கடவுள் அதிஷ்டிக்கும் தூல மாயா தத்துவங்களுள் ஒவ்வொன்றினையும், சூக்கும மாயா தத்துவங்களுள் ஒவ்வொன்றினையும், அதிசூக்கும மாயா தத்துவங்களுள் ஒவ்வொன்றினையும், முறையே தெய்வ ஸ்தானமாகவும் முத்தி ஸ்தானமாகவுங் கொண்டு நிற்கும். அகச்சமய பேதங்கள் முதற்கடவுள் அதிஷ்டிக்கும் தடத்த வடிவங்களாகிய மாயா சுத்த தத்துவங்களுள் ஒவ்வொன்றினைத் தெய்வஸ்தானமாகவும் முத்தி ஸ்தானமாகவுங் கொண்டு நிற்கும். அதீத சன்மார்க்கமோ தத்துவாதீதமாயுள்ள

முதற்கடவுளின் சொரூப சின்மயவெளியினையே தெய்வ சந்நிதியாகவும் முத்தி முடிபாகவுங் கொண்டு நிற்கும்.

இனி, இது முதற்கடவுள் நிறுத்திய பூரணசமயமென்றும், இவை தத்துவஞான சித்தியுடையார் முதலியோர் நிறுத்திய சமய பேதங்களென்றும், இப்பொதுவுரையில் வரைந்து சொல்லோம். இலக்கணங்கொண்டு இலக்கியம் வரையறுத்து உணர்வார்போலச் சமயங்கள் சொல்லும் பொருட்பலாபலங்கொண்டு இது முதற் கடவுள் நிறுத்திய ஆதிப் பெருஞ்சமயம், இவை ஏனையோர் நிறுத்திய சோபான சமயங்கள் என்றும், இவற்றுள்ளும் இப்பிரபலத்தினால் இது உயர்ந்தது, இத்துர்ப்பலத்தினால் இது அதனிற்றாழ்ந்தது என்றும், சமய வரையறை எய்தத் தாரதம்மிய விவேகஞ்செய்தல் விவேகிகள் கடனும்.

இனிச்சமயங்களின் வன்மையும் மென்மையும் பகுத்தறிதற்கு அநுகூலமாகுங்கருவிகள் பல உண்டு. அவற்றுள், அவ்வன்மை மென்மை வேறுபாடுகள் இலகுவாக அறியநிற்கும் பொதுக்கருவிகள் சில சொல்வாம். எந்தச்சமயம் தான் பரம்பொருளெனக் கூறுந்தெய்வத்திற்கு நால்வகை யோனிவாய்ப்பட்டுப் பிறந்து இறந்துவருங் கர்மகதி கூறிற்றில்லையோ அது வலியுடைய சற்சமயம். எந்தச் சமயம் தான் பரம்பொருளெனக் கூறுந்தெய்வத்திற்கு நால்வகை யோனிவாய்ப்பட்டுப் பிறந்து இறந்துசெல்லுங் கர்மகதி கூறிற்றோ அந்தச் சமயம் மென்மையுடைய அசற்சமயம். எந்தச் சமயம் பிற சமயங்களும் சாஸ்திரங்களும் சொல்லும் பொருளெல்லாம் தன் கண் அடங்கக்கொண்டு அவை சொல்லாத பல நுண்பொருள் சொல்லி மேம்படுமோ அந்தச் சமயம் வலியுடைய சற்சமயம். எந்தச் சமயம் அவ்வாறின்றி ஏகதேசப்பொருள் மாத்திரமே சொல்லிக் கீழ்ப்படுமோ அந்தச் சமயம் மென்மையுடைய அசற்சமயம், எந்தச் சமயம் சமயங்களெல்லாஞ் சீவர்கள் கன்மபேதத்திற்கேற்ப முதற்கடவுள் நிறுத்தியன வென்னுமோ அந்தச்சமயம் வலியுடைய சற்சமயம். எந்தச் சமயம் தன்னைச்சுட்டி இவ்வொரு சமயமே கடவுள் நிறுத்தியது ஏனைச்சமயங்களெல்லாம் மனிதர்தாமே கட்டி நடத்தினவென்னுமோ அந்தச் சமயம் மெலிவுடைய அசற்சமயம். எந்தச் சமயம் யாதொரு தெய்வங்கொண்டு வழிபாடு செய்யினும் முதற்கடவுள் அவ்வத் தெய்வங்களிடமாக நின்று அவ்வழிபாடு



கொண்டருளி அருள் வழங்குவனென்னுமோ அந்தச் சமயம் வலியுடைய சற்சமயம். எந்தச் சமயம் தான் கூறும் சமய வழிபாட்டொன்றனையே கடவுள்கொண்டு அருள்செய்வர் அல்லாச் சமய வழிபாடெல்லாம் கடவுள்கொண்டு அருள் வழங்கார் அவ்வழிபாடெல்லாம் வீண் செயல்களென்னுமோ அந்தச்சமயம் மெலிவுடைய அசற்சமயம். இவையும் இவைபோல்வன அளவைகள் பிறவுஞ் சமய வன்மை மென்மை வரையறுத்தற் கநுகூலமாகும் பொது இலகு கருவிகளென் றறிக. நால்வகை யோனியுள் ஒன்றிற்பட்டுப் பிறந்திறவாமை கடவுட்டன்மையாதலாலும், அப்படிப் பிறந்திறத்தல் ஜீவ கதியாதலாலும், எல்லாச்சமயப் பொருளும் அடங்கக்கூறி அவை கூறாத நுண்பொருளுங்கூறிவைத்தல் வியாபக அறிவுத்தன்மையாதலாலும், சிலபகுதிப்பொருளே அடங்க உரைத்து வைத்தல் சிற்றறிவுத்தன்மையாதலாலும், அறிவின் தாரதம்மியத்தினாற் பல வகுப்புடைய மாணாக்கர் பலர்க்கும் அவரவர்க்கேற்குமாறு கலைகளைத் தூலவருந்தநியாயம்பற்றிப் பருப்பொருளாகவும் நுண்பொருளாகவும் வகுத்துக்கொண்டு நல்லறிவுச்சுடர் கொளுத்துதல்போலப் பக்குவ பேதத்தினாற் பலவகைப்பட்டு நிற்கும் புருஷ கோடிகள் அனைவர்க்கும் அவர் அவர்க்கு ஏற்கும் வண்ணம் உண்மை ஞானத்தினைத் தூல சூக்குமமாகப் பலவகைப் படுத்திக்கொண்டு கிரமத்தில் ஞானம் விளங்கப் பெரிதருள்செய்தல் பேரருளும் பெருநாயகத் தன்மையுமாய் முடிதலாலும், அப்படியன்றி ஒரு வகுப்பார்க்கு ஓர் வகைக்கலை அறிவு கொளுத்தல்போல ஒருவகைப் புருஷர்கள் மாத்திரைக்கே ஒரு ஏகதேசசமயம் வகுத்து அற்ப ஞானம் அருளுதல் ஏகதேச அருளும் ஏகதேச நாயகத் தன்மையுமாய் முடிதலாலும், எல்லாத் தெய்வங்கள் இடமாக நின்று வழிபாடுகள் கொண்டு அருளுதல் வியாபகவருட் பெருங்குணமாய் முடிதலாலும், ஓரிடத்து நின்று வழிபாடு கொண்டு அருள் செய்து, அல்லாவிடத்து நின்று வழிபாடுகொண்டு அருள் செய்யமாட்டாமை வியாப்பிய வருட் சிறுகுணமாய் முடிதலாலும், இவை சமய வன்மை மென்மைகளை உள்ளபடி இலகுவாக அளந்தறிதற்கேற்ற அளவைக் கருவிகளாதல் காண்க.

முதற்கடவுள் புருஷர்கள் தத்துவ ஞானமெய்தி உய்யச் சமயம் வகுத்து அநாதிகாலத்தில் அதனை ஒன்றாக நிறுத்தாமல் பலபேதப்

பட இங்ஙனம் நிறுத்தியதென்னையோவெனின், ஒரு கலாசாலையிற் கற்கும் மாணாக்கர்கள் பிறப்பினால் ஒரு தன்மையுடையராயினும், அறிவின் தீவிர மந்தவிளக்க பேதத்தினால் பல வேறுபாடுடையராயிருத்தல்பற்றி அவரைப் பல வகுப்பினராகப் பிரித்து அவ்வகைகளுக்கேற்ப நுட்பமாகவும் பரிதாகவும் கல்விகளைப் பலவகைப்படுத்துக் கற்பித்தல்போல, புருஷர்கள் பிறப்பினால் ஒரு தன்மையராயினும், பக்குவ பேதங்கள் காரணமாகத் தீவிரமாகவும் மந்தமாகவும் விளங்கும் அறிவின் தாரதம்மிய விளக்கமுடையராயிருத்தலினால், கருணா நிதியாகிய கடவுள் அவர் அவர்க்கு ஏற்கும்படி நுண்பொருளுடையனவாகவும் பருப்பொருளுடையனவாகும் சமயங்கள் பல நிறுத்தினார். அதனால், அது நீதியேயாமன்றிக் குற்றமாகமாட்டாதென்க. சிலர் இம்முறை தெரியாமல், கடவுள் ஆதியில் நிறுத்திய சமயம் ஒன்றே; மற்றைச் சமயங்களெல்லாம் காலந்தோறும் மனிதர் கடவுள் கருத்துக்கு மாறாகக் கட்டி நடத்தினவென்பர். அது பொருந்தாது. என்னை? கடவுள் சர்வ சத்தியையுடைய சுதந்திரராதலினால், சத்தி சிறிதுடைய சுதந்திரமில்லாத மனிதர் கடவுள் சுதந்திர சங்கற்ப சத்தியைக்கடந்து அங்ஙனம் சமயங்கள் கட்டி நடத்தக் கருவியும் இடமும் காலமும் முயற்சியும் பெறுதல் கூடாமையாலென்க. அதுவேயுமன்றிப் பக்குவ பேதமுடைய புருஷர்களைப் படிவரிசையினாலன்றி ஒரு படியில் வைத்து ஒப்ப அறிவு விளக்குதல் கடவுளின் பெரிய அருளொப்புரவுக்குக் குற்றமாயுமுடியும்.

இனிச் சமயங்கள் தத்துவ ஆசார விசேட நுட்ப கதிகள் பற்றிப் பேதப்படினும், தர்க்க நூல்களுக்கெல்லாம் இணங்கும் லௌகிக சித்தாந்தங்கள் பற்றியும், நீதி நூல்களுக்கெல்லாம் இணங்குங் கொல்லாமை, புலாலுண்ணாமை, களவுசெய்யாமை, கள்ளுண்ணாமை, பிறர் மனை விரும்பாமை முதலிய நீதிகள் பற்றியும், பேதப்படாவாம். சில மிலேச்ச சமயங்கள் முற்சொல்லிய தர்க்க சித்தாந்த விரோதமாகும் அவசித்தாந்தங்களும் நீதி விரோதமாகும் கொலை, புலாலுணல், கள்ளுணல் முதலிய அநாசாரங்களும் சமயப் பொருளாகக் கொண்டுரைக்கும். ஆரிய கலைஞான சித்தாந்த அறிவுக்கும் நீதிக்கும் வெகுதூரமாய் ஒதுங்கின காரணத்தினால், அந்த அநாரிய சமயங்கள் அவ சித்தாந்தங்களையும், சீவகாருண்ணிய



தரும விரோதமாகும் அதர்மங்களையும், அங்ஙனம் சமயப் பொருளாகக் கொண்டுரைத்துத் தோஷப்படுவனவாயின.

சமய வேறுபாடுடைய மனிதர்களுள்ளே மேற்சமயிகள் கீழ்ச்சமயிகளை இளையசகோதரர்களாகவும், கீழ்ச்சமயிகள் மேற்சமயிகளை மூத்தசகோதரர்களாகவும் மதித்து, ஒருவர்க்கொருவர் அன்பு செய்தொழுகலே விவேக நெறியாம். சமய தாரதம்மியவகை சமயிகளுக்கு அறிவொற்றுமைக்குக் காரணமாவதன்றிக் கலக காரணமாகமாட்டாது. ஒரு பெரிய கலாசாலையில் கற்கும் மாணாக்கர்கள் அறிவு விளக்கத்தின் தாரதம்மியத்தினால் மேல் கீழாகப் பேதப்பட்டிருக்கக் காண்கின்றோம். அப்படிப் பேதப்பட்டிருக்கும் மாணாக்கர்களுள் மேல் வகுப்பு மாணாக்கர்கள் தங் கீழ் வகுப்பு மாணாக்கர்களைக் குறித்து இவர்கள் மேல் வகுப்பில் வந்து நுட்பக்கலை கற்குஞ் செவ்வி என்று கூடுமோவென்று அவர் ஆக்கங் கருதி அநுகூலங்கள் செய்தலை ஒழுக்க நெறியாகக் கொள்வர். கீழ் வகுப்பு மாணாக்கர்கள் மேல்வகுப்பு மாணாக்கர்களைக்குறித்து இவர் விசேட அறிவு விளக்கம்பெற்ற பெருமையினாலன்றோ மேல் வகுப்பிற் பிரவேசிக்கப்பெற்று நுட்ப வித்தைகளைக் கற்றற்கு அதிகாரிகளாயினர். நாங்களும் அறிவுவிளக்கம் விரைவிற் பெற்று மேல் வகுப்பினை அடைந்து அந்த வியாபக நுட்பவித்தைகளைக்கற்கும் அதிகாரத்தினை இவர்போல் எய்தல் வேண்டுமென்று கருதி முயலுதலை ஒழுக்க நெறியாகக்கொள்வர். ஆம் மேல் கீழ் என்னுந் தாரதம்மியவகை அவர்கள் அறிவொற்றுமைக்கே காரணம் ஆதலல்லது கலககாரணம் ஆகுதல் இல்லை. இந்த முறையினால், மேற் சமயிகள் கீழ்ச்சமயிகளைக் குறித்து இவர்கள் ஞானவிளக்கம் உண்டாகி எம்மைப்போல மேற் சமயப்படி ஏறி உய்யுங் காலம் என்று சித்திக்குமோவென்று இரங்கி அவர்கள் ஆக்கங்கருதி வேண்டும் அநுகூலங்கள் செய்து வருதலும், கீழ்ச் சமயிகள் மேற் சமயங்களைக் குறித்து இவர் தவத்தின் வலியினாலன்றோ மேலான சன்மார்க்கம் எய்திக் கரும ஞான சித்திகளில் எம்மினும் மேம்பாடுடையராயினர், நாங்களும் தவ முயற்சியினால் அம்மேற்சமயஞ் சார்ந்து கருமஞான சித்திகள் அவர் போலப் பெரிதாக எய்தல் வேண்டுமென்று எத்கற்று முயலுதலுமே, அறநெறியாம். இப்படிச்செய்தலைவிட்டு, மேற்சமயிகள் கீழ்ச்சமயப் பொய்ம்மைகளை அச்சமயிகளுக்குமுன்

எடுத்துப்பேசி இகழ்ச்சி செய்து அவர்களுக்குக் கோபமூட்டிக் கலகம் விளைத்தலும், கீழ்ச்சமயிகள் மேற்சமயப் பெருநூல்கள் தாங் கிரகிக்கக்கூடாத நுட்பமும் தஞ்சமயங்களிலில்லாத நூதனங்களுமாயிருத்தல் காரணமாக அம்மேற் சமயங்களை மனம்போனபடி தூஷித்து அம்மேற் சமயிகளுக்கு மனவருத்தம் உண்டாக்கிக் கலாம் விளைத்தலும், ஒழுக்க நெறியாகமாட்டாவாம். இன்னும், மேற்சமயிகள் கீழ்ச்சமயிகளுக்கு அவர் சார்ந்துநிற்குஞ் சமயப் பொய்ம்மைகாட்டி அவரை மேலாயுள்ள தஞ்சமயங்களில் வழிப்படுத்தி உய்யச்செய்யுங் கருத்துடையாராங்கால், அவரோடு உலகியல் ஒழுக்க வழியால் அன்பு செய்து கலந்து நட்புடையாராய்ப் பொதுவிலே நின்று நியாய நெறியால் சமய சம்பாஷணம் மெல்ல மெல்லச் செய்து சமயப் பொய் மெய்களை உள்ளபடி அவர் தெளிய விவேகச்சுடரை அவர்க்குக் கொளுத்தி அப்படிச் செய்தலே புத்தியாம். கீழ்ச்சமயிகள் அங்ஙனஞ் சமய சம்பாஷணத்தினால் தங்களிடத்து உதித்துப் பிரகாசிக்கும் விவேகக் கண்களால் தங்கள் சமயப் பொய்ம்மையும் மேற்சமய மெய்ம்மையும் உள்ளபடி காணப்பெறுங்கால், தஞ்சமயப் பற்றுவிடுத்து தாம் மெய்யெனக்கண்ட மேற்சமயஞ் சார்ந்து உய்ய முயலுதலே அறிவாம். இனி அப்படி உண்மை கண்டபின்னும், தூரபிமானத்தினால் மேற்சமயம் பற்றி உய்யமுயலாமல் தாஞ்சார்ந்துநிற்குஞ் சமயங்களே சன்மார்க்கங்களென்று மனச்சான்றுக்கு விரோதமாகப் பொய்ப்பாராட்டுச்செய்து மேற்சமயங்களை அவமதித்துக் கடடவொழுக்கம் பூணுதல் பாவமாம். இது இங்ஙனம் நிற்க. சத்தியமிக்க மேற்சமயிகள் சத்தியங்குறைந்த கீழ்ச்சமயங்களைப் பற்ற ஒருக்காலும் சம்மதியார். ஆரியர்களாகிய வைதிக மேற்சமயிகள் இக்கலியுகத்திற் சிலர் கொண்டு அனுஷ்டிக்கும் அநாரியமாகிய விவிலிய சம்பந்தமான கீழ்ச்சமயங்களிற் பிரவேசித்துக் கெடக்காண்கின்றோம். பிரகிருதசம்பந்தம் பற்றி அக்கெடுதியைச்சுட்டிச் சிலசொல்வாம். ஆரியர்கள் சமய நூல்களாகக்கொண்ட வேதாகமமுதலிய சாஸ்திரங்கள் சித்தசுத்தியைத்தரும் விதிவிலக்கு நிறைவும், தர்க்கமுதலிய கலைஞான சம்மதமும், பதி பசு பாச பதார்த்தவிசார பூரணமும், தத்துவஞான சித்தி சாதன பூரணமும், சகல புருஷ பக்குவாநுகூல கருமஞான சித்தி முத்தி சாதனோபாய பூரணமும், சமஸ்த ஜீவ காருண்ணிய நீதி மார்க்க பூரணமும் உடையன. அநாரியர் சமய நூலாகக்கொண்ட



விவிலிய முதலிய நூல்கள் சித்த சுத்தியைத்தரும் விதி விலக்குக் குறைவும், தர்க்க முதலிய கலைஞான விரோதமும், ஜீவேசுவர ஜகத்பதார்த்த விசாரக்குறைவும், தத்துவஞானசித்தி சாதனக்குறைவும், ஏகதேச புருஷாநுகூல கரும சாதனோபாயமும், மனிதஜாதி மாத்திரமான ஜீவகாருண்ணிய நீதிமார்க்கமும் உடையன. இந்த முறைமைகளால் ஆரிய சமயங்களும் அநாரிய சமயங்களும் தம்முள்ளே வித்தியாசம் அதிகம் உடையவைகளென்பது பிரசித்தம்.

வைதிக சமயிகள் தங்கள் சமயக்கொள்கைகளோடு இங்ஙனம் வித்தியாசம் பெரிதுடையனவாய் மிகவுங் கீழ்ப்பட்டிருக்கும் விவிலிய சமயங்களை நல்லனவென்று பற்றுதற்கு நியாயம் சிறிதுஞ் சித்திக்காது. இனி ஆரியசமயிகளிற் சிற்சிலர் இக்காலத்தில் கீழான விவிலிய சமயங்களிற் பிரவேசித்தற்குக் காரணம், வைதிகசமய விதிவிலக்குக்களாகிய கருமங்கள் அநுஷ்டித்தற்கு அரியபண்டிதக் கொள்கையாதலும், விவிலிய சமயக் கொள்கைகள் அநுஷ்டித்தற்கெளியபாமரக் கொள்கைகளாதலும், மனம்போகுமாறுபோய் இச்சாபோகங்களை அநுபவித்தற்கு அநுகூலமாயிருத்தலுமேயாம். அநித்தியமும், துக்கமும், இழிவும், பழியுமுள்ள பொய்ப் போகங்களை அநுபவித்தற் பொருட்டு நித்தியமும், சுகமும் உயர்வும், புகழுமுள்ள வைதிகசமயங்களைக்கைவிட எண்ணுதல் அந்தோ! மேன்மக்களாகிய ஆரியர்களுக்கு எவ்வளவு மதிகேடு!! எவ்வளவு அவமதிப்பு!! எவ்வளவு பழி!! எவ்வளவு பாவமாம்!! வைதிக சமயிகளுக்குள்ளே வேறு சிலர் தரித்திரக் கொடுமையினால் அன்ன வஸ்திரம் பெற்று உடல் ஓம்பும் பொருட்டும் விவிலிய சமயங்களிற் பிரவேசிக்கின்றார். தொழின் முயற்சிக் குறைவினால் தரித்திரம் உண்டாகும். தொழின் முயற்சி செய்து பொருளை ஈட்டின், அதுகெடும்; செல்வ வாழ்வு உண்டாகும். இதற்குப் பயந்து சாதியாசாரம் சமயாசாரம் விட்டுக் கீழான புன் சமயங்களிற் பிரவேசித்துப் பழிபூணல் பெரியதோர் மதிகேடு! இப்படி மதிகெட்டு விவிலிய சமயங்களிற் பிரவேசித்துப் பதிதத் தன்மை யெய்தினவர்களுள்ளே ஒரு சிலர், போகவாசையும் பொருளாசையும் அநுபவத்தினாலும் பொருட்பேற்றினாலும் நீங்க, மோகந்தெளிந்து அறிவுவரப் பெற்றபின், ஆரியமேன்மக்கட் பேற்றினையும், வைதிக சற்சமயப் பேற்றினையும், நல்வினையாற் பெற்றிருந்த நாம், ஐயோ! அற்ப தூராசை தரித்திரங் காரணமாக மயங்கி அறிவுகெட்டு அப்

பேறுகளைக் கைவிட்டு, இந்த இழிந்த சமயங்களில் வீழ்ந்து குலங்கெட்டோம்! குணங்கெட்டோம்! நலங்கெட்டோம்! நற்சமயங்கெட்டோம்! என்று பச்சாத்தாபப்படுகின்றார். இவர்களுள்ளே சிலர் தங்கள் முன்னைச் சமயங்களைச் சாரக்கருதி முயன்றவழியும், வைதிகசமயிகள் சாதிகெட்டுச் சமயங்கெட்டு நீதி கெட்டு நிலை குலைந்து பதிதரான நீங்கள் எங்களோடு சேரவொட்டோம் என்று ஒதுக்க, என் செய்வோம்! தெய்வமே! இதுவும் படக்கடவமோ! என்று கவலைக்கடலுள் மூழ்குகின்றார். இவருள்ளே சிலர், உலகறிய விவிலிய சமய கண்டனஞ்செய்து ஆரியர் அயிர்க்காமல் விவிலிய சமய வேடம் பெயர் மாற்றி ஆரிய சமய வேடம் பெயர் தரித்து ஆரிய நடை மேற்கொண்டு ஒழுகுகின்றார்கள். அப்படித் துணிந்து முற்சமயப் படியேறி வாழ்பவரை ஆரிய சமயிகள் அவர் இடை வழுக்குற்றெய்திய இழிவையெண்ணிச் சமய கருமங்களில் ஒரு புறமாகக் கொள்கின்றனர். அறியாமையினால் ஆரிய சமய தரும நஷ்டமுற்றோர் அந்நஷ்டத்தினை நினைந்து பச்சாதாபப்படுவரேல், பிராயச்சித்த சற்கருமத்தினால் அவர் பாவங் கழுவி உய்தி கூட, விதி விலக்கு வாக்கியஞ் செய்த தரும சாஸ்திரகாரராகிய வைதிகாசாரியர்கள், ஒரு வழி விட்டார்களில்லை போலும்! காலத்துக்கேற்பச் சீலம்போற்றல் அறிந்தார் கடனாதலால், இக்காலத்து நமது வைதிகாசாரியர்கள் அத்தன்மையோர் சுத்தி பெற்று ஆரியராய் வேறிருந்து சமயப்பேணி உய்தற்கோர் நல்வழியைத் தரும சாஸ்திரசம்மதமாக இக்காலத்துக்கேற்க உலகறிய விதித்தல் நலமாம். தம்பந்துக்களாகிய ஆரிய மாதராடவர்கள் தருமநெறியில் பிழைத்தால், ரகசியமாக அவர்பாவநீங்கிச் சாதியில் இருந்து வாழப், பிராயச்சித்த உபாயத்தால் சுத்திசெய்யும் ஒழுகலாறுகள், அங்கங்கே வைதிகாசாரியர்களால் வர்த்தமானத்திலும் அநுஷ்டிக்கப்படக் காண்கின்றோம். அவ்வாறே இச்சமய தரும நஷ்டமடைந்தார்க்கும் ஓர் உபாய சுத்தியை விதித்தல் அவர்க்குக் கடப்பாடாம். அச்செய்தி அவர்க்குப் புகழ்ச்சியாமே யன்றி, இகழ்ச்சியாகமாட்டாது. முற்காலத்தும், ஆரிய சமய உண்மை தேறாமல் ஆருகத முதலிய அவைதிக சமயங்களைச் சற்சமயங்களென்று விபரீதமாகக் கொண்டு இழவூழ் வலியால் அவற்றிற் புகுந்த ஆரியோத்தமர்கள் சிலர், பின்னர் ஆகூழ் உற்றுழி உதவ அச்சமயங்களின் பொய்ம்மை கண்டு, தம்முன்னைச் சமயத்துண்மை



தேறிக், கடவுள் அருளாலும் கடவுள் அருள் பெற்ற ஆசாரியர்கள் அருளாலும் அவைபற்றி உயர்ந்து வைதிகர்களாய் மேம்பாடு பெரிதும் எய்தினார்களென்று புராணங்களும் அறிவுறுத்தும், இனித்தஞ்சமயவுண்மை தேறப்பெறாது தீயூழ் வசத்தினால் ஆருகத முதலிய அவைதிக சமயங்களிற் பிரவேசித்த நல்லோர்க்கும், துராசை தரித்திரங் காரணமாக அநாரியமான விவிலிய சமயங்களிற் பிரவேசிக்கின்றவர்க்கும், வேற்றுமை பெரிது. அவர், தஞ்சமயவுண்மைதேறாது நன்னெறி கடைப்பிடித்துய்யல் வேண்டுமென்னுங் கருத்துடையராய்க், கொல்லாமை புலாலுண்ணாமையென்னுங் கபடசீலம் பெரிதுடைமையே பற்றி, அந்த அவைதிக சமயங்களை நன்னெறிகளென்று மயங்கிக் கைக்கொண்டவர். இவர்கள், நிலையாதபழி படு போகத்தினையும் இழியுடலோம்புதலையும் பொருளாகக்கருதி, நிலையுள்ள புகழ் இன்பம் பயக்குஞ் சற்சமயத்தினைக் கைவிடுகின்றவர்கள். அவர், புகுந்த சமயங்கள் கொலை புலாலுணல் கள்ளுணால் என்னும் பெரும்பாவங்களை விலக்குவனவாதலால், சமயநலங் கெட்டாரன்றிக் குலநலங் கெட்டிலர். இவர்கள், புகும்சமயங்கள் கொலை புலாலுணல் கள்ளருந்தல்களென்னும் பெரும்பாவங்களைத் தருமமாக விதிப்பனவாதலால், சமயநலக்கேட்டுடன் குலநலக்கேடும் எய்துகின்றார்கள். அன்றியும், அவர், தெய்வத் திருவருள் கைவந்து கிடக்கப் பெற்று மேம்பட்டவர். இவர்கள், சிறிது விவேகம் உதிக்கப்பெற்று மேலே வரக் கருதுகின்றவர். ஆதலால், இருவர்க்கும் வேற்றுமை பெரிதுண்டென்றறிக. கீழ்ச் சமயத்தில் இறங்கி முன்னை மேற் சமயத்தில் வருதல் மாத்திரைக்கே அப்பெரியோரை இவர்க்குத் திருஷ்டாந்தமாக உரைத்தோம்.

இனிவைதிகர்களாகிய ஆரியசமயிகள் சமயக்கொள்கையைப் பற்றிப் பலபேதப்படினும், வருணாச்சிரம ஒழுக்கமுறையில் வேறுபாடு இன்றி ஒத்த நடையுள்ளவர்களாயே இருத்தலினால், அவர்களுள் தம்மேற் சமயத்தினின்றும் இழுக்கிக் கீழ்சமயம் புகுந்து மேற்சமயமேற விரும்புவோர்களும், கீழ்ச் சமயிகளாய் வைதிக மேற்சமயம் ஏற விரும்புவோர்களும், விரும்பும்பொழுதே, தாங்கள் மேற்புக விரும்புஞ் சமயாசாரியர்கள் பால் அச்சமய ஸம்ஸ்காரம் பெற்றுச், சமயப்பிரவேசஞ்செய்து, வேறுபாடு இன்றி அம்

மேற்சமயிகளோடு கலந்து, அச்சமயிகளாய் ஒழுகுதற் குரியர்களாவர். அவர்களுக்கு மேற்சொல்லிய சங்கடங்கள் உண்டாவதில்லை. ஆரிய சம்பந்தமுற்றுக் கொல்லாமை புலாலுண்ணாமை முதலிய சீலம் பேணி ஆரிய தேசத்தவர்களாய் வாழும் ஆருகதர் பௌத்தர் என்னும் அவைதிக சமயத்தார்களுக்கு இம்முறை ஒருவாறு ஒப்பற்பாலதன்றி எல்லாவாற்றினும் ஒப்பற்பாலதன்று. அற்றுக. ஆரிய நடையோடு மாறுபட்டு அப்புறத் தேசத்தவர்களாய் வாழும் அநாரிய சமயபேதிகள் தம் இழிவிய கொள்கைப் பொய்ம்மைகண்டு கொலை ஊன் உணவு மது உணவு முதலிய துராசாரமறுத்து ஆரியசமய மெய்ம்மைதேறி அவற்றுள் ஒரு சமயஞ் சாரவிரும்பின், அவ்வழி அவர்குச் செய்யற்பாலது யாதெனின், உண்மையில் பாஷை சாதிபற்றிப் பேசும் விகற்பம் ஈசுரன் சந்நிதிக்கு மிக்கதூரமென்று உண்மைநூல் கூறுதலால், பக்குவமுடையராகும் அவர்க்கும் ஒருவகை ஸம்ஸ்காரஞ்செய்து ஆரிய சமயத்தராக்கி உய்யக்கோடலே கிருபைமிக்க ஆரியவைதிக சமயாசாரியர்களுக்குக் கடப்பாடாம். அங்ஙனம் சமய ஸம்ஸ்காரம் பெற்று ஆரிய சமயத்தினராய் உயரும் அந்த விவேக புருஷர்கள் ஆரிய சமய வழுக்கி இழிவிய சமயம் வீழ்ந்து அவற்றின் பொய்ம்மைகண்டு முன்னைத் தங்கள் ஆரிய சமயஞ்சார விரும்புவார்போல, ஒரு புறமாக வைகிச் சமயவொழுக்கம் பேணுதற்குரியராவர்.

(இன்னும் வரும்)

"ஞானமிர்தம்."

---

# திருப்பனந்தாளிற்கூடிய
# சைவசித்தாந்த மகாசமாஜப் பெருங்கழக
## வாழ்த்துக்கவிகள்.

---

**சீர்மேவு :—** தண்டலைக்கொண்ட லைக்கண்டுமயில் சிறைவிரித் தாடமஞ்ஞை
தேனுண்டு பண்பாடவிதழி பொன்சொரிதரச்
செந்நெலெல்லாங் கரும்பிற்

செறிசெறுவின் மரைமலர்ச் சேக்கையுறை யோதிமந்
தினமணஞ்செய்யும் வளமார்

திருப்பனந்தாண் மடாதிபதியாய்த் தருமை மாசிலாமணியருட்
குரவர்கோன்

செப்பிய படிக்கலைத் திடுதருமம் யாவையுஞ்சீர் செய்ய
வேண்டுமென்று

சிந்தைசெய்தக்குமாரகுரு பரசுவாமியே திருவுருக்கொடுவந்துநஞ்
சித்தாந்த சங்கத்தினைத் தம்மாலயத்திற்கூட்டி யுலகுபரம
சிவமே பரம்பொருளெனத் துணிந்நடைவழி தெரித்தருளினு
ரென்னவும்.

**கார்மேவு:—** செஞ்சடைக் கண்ணுதற் கடவுண்முன் கழகத்திலாய்ந்த தமிழிக்
காலத்தி லெவ்விதமிருப்ப தென்றோர்ந்திடக் கருதியப்பெயர்
வகித்துக்

கங்கையரவென்பணி காந்துபுலியாழ் தமிழ்க்கவிஞரை
வரித்துநாய

கத்துவம்பூண்டுளாரென்னவும் வெண்டிருக்கயிலாயபாரம்பரைக்
கண்வந்த வாதினம் யாவுமிவ்வாறு சங்கங்கூட்டி நமதுசமயக்
கடவுளியல் சீவனியல் பாசவியல் யாவையுங் கரதலாமலக
மென்னக்

காட்டிவந்தாற் சைவர்சமயத்தை விட்டுக் கடப்பார்களோ
வென்னவும்

கலியுகக் கொடுமையாலாதீன குருமூர்த்திகளை வெறுத்துரை
செயாதிர்.

பார்மேவு:—தலமெலாம்பணியைத் திருத்திப்
பாரார்த்தபூசையு மொழுங்காய்ப்
பண்ணும்படிக்கு நிதி பாலித்திவ்வாறு
தப்பாது புரிவாரென்னவும்
பரசமயயானைக் கரிக்குருளை சைவப்பயிர்க்கு
முகில் கற்றவர்க்கெப்
பரிசிலு மளிக்குமைந் தருவெனவு
மறிவுடையர் பன்னவிப் பூதலத்திற்

பத்தியின் மிகுந்த விற்பன்னரையெலாம்
வரப்பணியன்பினு தரித்துப்
பாவலர்களுக் காதிபதியா யமர்ந்தனேர்
பகர்சர்வ ஞானோத்தரம்
பதியறிவு கற்றவர்களே விழுங்கும்
கற்பகக்கனி திருவாசகப்
பண்பு சிவபாரம் பரியமோடு - சிவசொரூபத்
தருமை பெருமையாதி

யேர்மேவு:—பிரபாவம் வேட்கையி னிலக்கண
மினிதோதலாதி சைவ
ரியல்குமர குருபரசுவாமி பிரபாவங்களிசை
பெற்ற சேக்கிழார் செய்
யின்பருள் புராணத்தின் மகிமை
மணிவாசக ரியற்றுகண் ணப்பனெப்பென்
றிசைகவியி னுண்மை சித்தாந்தசபை
மாட்சிமை யிலங்கு நீரிற்கு மிழியென்

றேத்துகவி யாகமப் பெருமைப் பிரசங்கமும்
மிடையிடையருட் பாக்களும்
யவருங்கேட்டிந் தமானிடப் பிறவியாலெய்து
பயன்முற்று முற்றோ
மென்னப் புரிந்த சம்பன்னன் மெய்ஞ்ஞான
நிலையெய்தி யமர்சொக்க லிங்கத்
தெம்பிரான் விசுவேசனருளினிச் சங்க
முடனென்னுளும் வாழ்க நன்றே.

---



செந்தாமரையினந் தினித்திலத்தைத் தமது முட்டையென்றே
திமங்களடை சேர்பனசை மடாதிபதி வாழியெமையாள
வந்தாய் வாழிசைவ சிகாமணியே வாழி மெய்ஞ்ஞான
வாரிகடைந்தின்ன முதளிக்கும் வல்லால் வாழி சிவஞானந்
தந்தாதரிக்குஞ் சொக்கலிங்கசாமீ வாழி சித்தாந்த
சமாஜநடத்திப் புகழ்படைத்த தலைவாவாழி நங்களுக்குச்
சிந்தாமணியாய்க் கற்பகமாய்ச் சிறக்குங் குமர குருபரமூர்த்
திக்கு நிகராய்வாழும் வித்வசிங்கம் வாழி வாழியவே.

சர்க்கரை - இராமசாமிப் புலவர்.

மன்னார்குடி.

---

## வாழ்த்துக்கவிகள்.

---

உலகமெலாந் தன்வயத்திலுடையவனே பரமென நூலுரைத்தற் கேற்பப்
பலகலையு முயிர்பலவும் பொருள்யாவும் சமயநடை பலவுமாங்க
ணிலகுபல தேவதையுந் தன்னகத்து ளடக்கியவற் றினுக்குமேலாய்
நிலவுவது வெதுவதுவே சன்மார்க்க சித்தாந்த நெறியாமன்றே. (௧)

இத்தகு சன்மார்க்க சைவசித்தாந்தக் கடவுளர னென்றே யன்னோன்
பத்தியினில் வையகமுந் துயர்தீர்க வவனைமம் பரவவென்னுச்
சித்தமுவந் தருளியநந் திருஞான சம்பந்தர் தேவா ரத்தைப்
புத்தியெனக் கொண்டுலக மின்பமுறத் துன்பமெலாம் போக்கருனே. (௨)

புண்ணியத்துண் மிக்கவுலகுபகாரமா மிதனைப் புரிதற் கெங்குங்
கண்ணியநற் சபைகூட்டி விரித்துரைக்கு மாறுவழி காட்டி மேலாய் [ன்னைத்
நண்ணியொவ்வோ ராண்டுதொறுந் தலைநகரங் களில்விரிவாய் நடத்துஞ் செ
தண்ணளிசேர் சைவசித்தாந்தக் கூட்டம் நீடூழிதழைகத் தானே. (௩)

அச்சபைக்க ணுடுபதிபோ னிரந்தரமுந் தலைமையக்கி ராசனத்தை
யிச்சையுடன் ருங்கியிது பணியென்றே காலமெலா மிதற்கே போக்கி
நச்சமருங் களப்பெருமா னருளினைப் பெற்றக்குறிப்பே நாடுங்கோமா
னிச்சாத்தோர்க் குறுதிசொறுஞ்சாமி நாதப்பெரியோரென்னுஞ் சீமான். (௪)

கருப்பனந்தாது ருமலரின்கணைக் கொதுங்குந் தவவாணர் கருதவெள்ளிப்
பொருப்பனந்தா வருள்வமெனத் திருக்கோயில் கொண்டருளும்
பொற்பின்மிக்க
திருப்பனந்தா ணகரிலிந்தச் சித்தார்த்தி தனுர்பத்திற்றிகழ நல்லோர்
விருப்பனந்தானங்கொடுத்துச் சபைநடத்திக் களிப்பெவர்க்கும்
விளைத்தார்மன்றே. (௫)

அன்னவரு மவர்க்கனுக்கராய மருநிருவாக வவையார்தாமும்
பன்னுசமா சத்தையினி தாங்காங்கு செயவுதவி படைத்தோர் நீதி
சொன்னவருங் கேட்டவரு மிவையினி மேற்புரிவோருந் தொன்றுதொட்டு.
மன்னியெலா நலமுமடைந்திசையோங்கி யென்ஞான்றும் வாழ்க மாதோ

**கு. அண்ணாமலைப் பிள்ளை,**

**போடிநாயக்கனூர்.**

---

சித்தாந்த சமாஜமெனுஞ் சிவமாது பதினொன்காயத்தி கழுமாண்டில்
நத்தார்ந்த பனந்தாளினவில்குமர குருபரனைநாளும் போற்றிச்
சத்தார்ந்த சொக்கலிங்கத் தயாநிதியைச் சபாபதியாச் சார்ந்துகூடி
வித்தார்ந்த கனதனமும் மிகுவணியும் பெருகியின்பம் மேவினளே.

**சண்முக சுவாமிகள்,**

**தருமபுர ஆதீனம்.**

---

# சைவசித்தாந்த மகாசமாஜத்தின்

## பதினொன்காவது ஆண்டு

### நிறைவிழாச் சிறப்பு

187114

---

வெஞ்சமனஞ்ச வேலொடெதிர்ந்தான் நமரங்காள்
அஞ்சலெனுஞ் சொல் ஆர்சொலவல்லார் நமரங்காள்
மஞ்சிவரிஞ்சி மன்றமிறைஞ்சீர் நமரங்காள்
நஞ்சமயின்றார் நல்குவர்மாதோ நமரங்காள்.

இப்பெருங் கழகத்தின் பதினொன்காவது ஆண்டு நிறைவிழா 1919ஞ டிசம்பர்மீ 25, 26, 27-ந் தேதிகளில் சோழநாட்டிலே பாடல்பெற்ற தலங்களில் ஒன்றுயதும் தாடகையென்னும் பெண் மணிக்காக முடிசாய்ந்தும், பிறகு அறுபான் மும்மை நாயன்மார்க ளில் ஒருவராய குங்கிலியக் கலய நாயனாரது அன்பிற்காக நிமிர்ந் தும் அருள் புரிந்த சிவலிங்கப்பெருமான் வீற்றிருக்கும் தாடகேச் சுரம் என்றும் திருக்கோயிலையுடையதும், அநேக அற்புதங்களைச் செய்து சைவசமயத்தைக் காசி முதல் கன்னியாகுமரிவரை பரப் பிய சிவாநுபூதிச் செல்வராகிய ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகளது மடமொன்றுடையதுமாகிய திருப்பனந்தாள் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் ஷை சுவாமிகளது மடத்தைச்சார்ந்த அலங் காரமும் விசாலமுமான மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டித வர்கள் பெருமுயற்சியால் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. ஷை ஆதின கருத்தராகிய காசிவாசி சோக்கலிங்க சுவாமிகள் அக்கிராசனம் வகித்தனர். பல இடங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான சைவாபிமானிகள் வந்த குழுமியிருந்தனர். கும்பகோணம் முதலிய இடங்களிலிருந்து அநேக உத்தியோகஸ்தர் களும் தருமபுரம் முதலிய ஆதீனங்களிலிருந்து சில தம்பிரான்

சுவாமிகளும் விஜயஞ்செய்திருந்தனர். தேவாரபாராயணம் சிதம்பரம் நடராஜ ஓதுவாமூர்த்திகளால் மூன்றுநாளும் செய்யப்பட்டது. சபைத்தலைவராகிய சுவாமிகளுக்கு நல்வரவேற்புப் பத்திரம், சமாஜத்தின் 13-வது வருட அறிக்கைப் பத்திரம் முதலியன கழகக் காரியதரிசியாகிய கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களாலும் நல்வரவேற்புக்கவி கி. குப்புச்சாமி முதலியார் அவர்களாலும் வாசிக்கப்பட்ட பின்னர் சபாநாயக சுவாமிகள் தமது முன்னுரையாகச் சைவ சமயத்தின் உயர்வைப்பற்றி சில கூறினார்கள்.

முதற்கண் தில்லைவாழந்தணருள் ஒருவராய பிரமஸ்ரீ குப்புசாமித் தீட்சிதர் அவர்கள் "சைவம்" என்னும் விஷயமாக ஒரு சிறு உபந்நியாசஞ் செய்தனர். இரண்டாவதாக, ஸ்ரீமான் பொ. முத்தைய பிள்ளை அவர்கள் "சர்வ ஞானத்தோர ஆராய்ச்சி" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக்கொண்டு சர்வஞானோத்தரம் என்னும் சாத்திரம் சைவசித்தாந்த பரமான நூலேயன்றி மாயாவாத நூலாகாதென்று பல ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டினர். மூன்றாவதாக, ஸ்ரீமான் பொ. நடேசமுதலியார் அவர்கள் "அறிவு" என்னும் விஷயத்தைப் பற்றித் தெளிவாகப் பிரசங்கித்தனர். இதன் பின்னர் சித்தாந்தப் பத்திராதிபராகிய ஸ்ரீமான். கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனி" என்னுந்திருவிசைப்பாவைப் பற்பல பிரமாண மேற்கோள்களுடன் யாவர் மனத்திலும் பசுமரத்தாணிபோற் பதியும்படி மிக விரிவாகவும் தெளிவாகவும் ஒன்றரைமணி நேரத்திற்கு மேல் பிரசங்கமாரி பொழிந்தனர். பிறகு அன்று நடந்த விஷயங்களுக்குக் குறிப்புரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதபண்டிதர் அவர்களால் கூறப்பெற்று முதல் நாள் விழா பூர்த்தி பெற்றது.

இரண்டாம் நாள் வழக்கம்போல் 11 மணிக்குமேல் சபை கூடிற்று. தேவாரபாராயணமானவுடன் முதன்மையாக திருநெல்வேலி ஸ்ரீமான் பால் வண்ண முதலியார் அவர்கள் "திருவாசகச் சிறப்பை"ச் சில பாசுரங்கள் முகத்தால் எடுத்து நன்கு விளக்கிக் காட்டினர். இரண்டாவதாக, ஸ்ரீமான் சிங்காரவேலு முதலியார் அவர்கள் சிவபரத்துவத்தை "சிவபாரம் பரியம்" என்னும் பிரசங்க வாயிலாக நிலைநாட்டினர். மூன்றாவதாக, பிரமஸ்ரீ ஆரங்கசாமி ஐயர் அவர்கள் "சிவ சொரூப"த்தைப்பற்றி பற்பல ஸம்ஸ்கிருத



தமிழ் மேற்கோள்களுடன் வெகுவிரிவாகப் பிரசங்கித்தனர். நான்காவது, ஸ்ரீமான் வேதாசல முதலியார் அவர்கள் "வேட்கை" யைப் பற்றிச் சில கூறினர். ஐந்தாவது ஸ்ரீமான் சமரபுரி முதலியார் "ஓதுதல்" என்னும் விஷயத்தைப் பிரசங்கித்தனர். பின்னுரை ஸ்ரீலஸ்ரீ பண்டிதரவர்களால் கூறப்பட்டது. இவ்வாறு இரண்டாம் நாள் விழாவும் ஒருவாறு முற்றுப்பெற்றது.

மூன்றாம் நாள், தருமபுர ஆதீனத்தைச்சார்ந்த ஸ்ரீமத் சண்முகத் தம்பிரான் சுவாமிகள் "சைவசமய மாட்சியும் குமரகுருபரரும்" என்னும் அரும்பெரும் விஷயத்தைப்பற்றிச் சாதுரியமாகவும் எல்லோரும் ஆனந்திக்கும்படியும் நீண்டதோர் உபந்நியாசஞ் செய்தனர். இரண்டாவது மதுரை ஸ்ரீமான் நல்லசாமிப்பிள்ளை அவர்கள் பெரியபுராணச் சரித்திரத்திலுள்ள திட்ப நுட்பங்களை எடுத்து நிரூபித்துக் காட்டினர். மூன்றாவது ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அவர்கள் "சிவாசாரியர்கள் தேவாம்சரே" என்னும் விஷயமாகச் சமயாசாரியர்கள் நால்வரும் தேவகணங்களே யாவர் என்று தக்க பிரமாண முகத்தால் அறிவித்தனர். நான்காவது ஸ்ரீமான் T. நல்லசிவன் பிள்ளை அவர்கள் சமாஜத்தின் நோக்கங்களையும் அதன் அபிவிர்த்திக்கேற்ற வழிகளையும் சித்தாந்த பாடசாலையொன்று சமாஜச் சார்பாக ஏற்படுத்துதலைப் பற்றியும் பல பேசினர். ஐந்தாவது மதுரை ஸ்ரீமான் சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை' என்னும் திருவருட்பாவை விளக்கினர். ஆறாவது மதுரை பிரமஸ்ரீ கலியாணசுந்தரபட்டர் அவர்கள் ஆகம விஷயமாக ஒரு அரிய பிரசங்கஞ் செய்தனர். பின்னர் மன்னார்குடி ஸ்ரீமான் சர்க்கரைப் புலவர் அவர்கள் வாழ்த்துக்கவி கூறி அக்கிராசன சுவாமிகளையும் சமாஜத்தையும் நீடூழி நிலவும்படி வாழ்த்தினர். பிறகு பண்டிதர் அவர்கள் பின்னுரை கூறி முடித்தனர். அதன் பின்னர்ச் சுவாமிகள் முடிவுரை கூறினார்கள். சமாஜத்திற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் தாம் புரிவதாகவும் வாக்களித்தனர். இரவு பத்துமணிக்கு மூன்றாம்நாள் விழா மங்கலகரமாக முடிந்தது.

விழாவின் நிமித்தம் வந்திருந்தவர்களுக்கு வேண்டிய வசதிகள் மூன்று நாளும் மடத்தாராலேயே யாதொரு குறையும் நேரிடாவண்ணம் அமைத்துக் கொடுக்கப்பட்டன. உபந்நியாசகர்களுக்குப்

பிரயாணச் செலவும் வெகுமானமும் சுவாமிகளால் அளிக்கப்பெற்றன. சுவாமிகளைப்பின்பற்றி மற்றைய மடத்தார்களும் இச்சமாஜத்திற்கு உதவி புரிவார்களானால் சமாஜத்தின் முழு நோக்கங்களையும் நிறைவேற்ற ஏதுவாகும். திருவருள் துணைபுரிதல் வேண்டும். "முடியாமுதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே".

## 1919ஹ டிசம்பர்மீ 27உ திருப்பனந்தாளில்கூடிய மகாசமாஜக் கூட்டத்தில் நடந்த தீர்மானங்கள்

1. இவ்வருடத்து அறிக்கைப் பத்திரம் சில மாறுதல்களுடன் அங்கீகரிக்கப் பட்டது.

2. ஆயுள் சமாசிகர் தொகையிலிருந்து எடுத்துச் செலவழித்த தொகையை மறுபடியும் இவ்வருஷத்துப் பணத்தினின்று திருப்பிக்கொடுத்து விட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

3. சமாஜ உத்தியோகஸ்தர்கள் பின் வருமாறு நியமிக்கப்பட்டனர்.

### போஷகர்கள்.

மாட்சிமை தங்கிய இராமநாதபுரம் மகாராஜா அவர்கள்.

ஸ்ரீமான் S. R. M. Ct. பெத்தாச்சிச் செட்டியாரவர்கள், M. R. A. S.

,, இரத்தினவேலுச் செட்டியாரவர்கள், சென்னை.

,, அ. தா. முத்துக்குமாரசாமிச் செட்டியாரவர்கள், கூடலூர்.

,, P. தெய்வசிகாமணிச் செட்டியாரவர்கள், சென்னை.

,, ஆண்டவராய விஜய அருணசல வணங்காமுடி பண்டாரத்தார் அவர்கள், பாலவனம் ஜமீன்தார்.

ஸ்ரீமத் அம்பலவாண நாவல சுவாமிகள், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமான் கி. இராஜு கிராமணியார் அவர்கள், மயிலாப்பூர்.

,, புழலை. திருநாவுக்கரசு முதலியாரவர்கள், மிராசுதார், செம்பியம், பிரம்பூர்.

ஸ்ரீலஸ்ரீ வ. சுவாமிநாத பண்டிதரவர்கள், சென்னை.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி - சொக்கலிங்க சுவாமிகள், திருப்பனந்தாள்.



### சபைத்தலைவர்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி - சொக்கலிங்க சுவாமிகள், திருப்பனந்தாள்.

### உதவி சபைத்தலைவர்.

ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளை யவர்கள், B.A. B.L., High Court Vakil, மதுரை.

,, T. நல்லசிவன் பிள்ளை யவர்கள், B.A. B.L., High Court Vakil, சென்னை.

### காரியதரிசி.

ஸ்ரீமான் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M.A. M.L., சென்னை.

### பொக்கிஷதாரர்.

ஸ்ரீமான் சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள், சென்னை.

### பத்திராதிபர்.

ஸ்ரீமான் கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள், சென்னை.

### கணித பரிசோதகர்.

ஸ்ரீமான் A. C. சண்முகநயினர் பிள்ளை அவர்கள், B.A. B.L.

,, ம. மாசிலாமணி முதலியார் அவர்கள், (Monthly Auditor)

### உள்ளூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீலஸ்ரீ வ. சுவாமிநாத பண்டிதர் அவர்கள்.

ஸ்ரீமான் - இராஜு கிராமணியார் அவர்கள்.

,, புழலை. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்.

,, சமரபுரி முதலியார் அவர்கள்.

,, ஆ. சிங்காரவேலு முதலியாரவர்கள்.

,, வல்லை. சண்முகசுந்தர முதலியாரவர்கள்.

,, T. S. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்.

,, C. ஏகாம்பர முதலியாரவர்கள்.

,, R. P. சேதுப்பிள்ளையவர்கள், B.A. B.L.

,, C. முருகேச முதலியாரவர்கள்.

# சித்தாந்தம்

## வெளியூர் நிர்வாக சபையார்.

ஸ்ரீமான் T. A. இராமலிங்கம் செட்டியாரவர்கள், B. A., B. L. கோயம்புத்தூர்.
,, T. S. சாமிநாதப்பிள்ளையவர்கள், திரிசிரபுரம்.
,, S. சபாரத்தின முதலியார் அவர்கள், யாழ்ப்பாணம்.
,, இராஜவேலு முதலியார் அவர்கள், B.A., வேலூர்.
மறைத்திருவன் - விருதை - சிவஞானயோகிகள், கோயில்பட்டி.
ஸ்ரீமான் - பொ. நடேசமுதலியார் அவர்கள், செங்கற்பட்டு.
,, T. சபாபதி முதலியார் அவர்கள், கட்டியாம்பந்தல்.
,, K. U. பொன்னுசாமி முதலியார் அவர்கள், உத்திரன்மேரூர்.
,, M. R. குமாரசாமிப் பிள்ளையவர்கள், திருக்கோவலூர்.
,, A. R. அமிர்தலிங்கம் செட்டியார் அவர்கள், பூவாளூர்.
,, W. T. கோவிந்தராஜ முதலியார் அவர்கள், தஞ்சை.
பிரமஸ்ரீ - கிரிவாசகுருக்கள் அவர்கள், சேலம்.
ஸ்ரீமான் - P. முத்தைய பிள்ளையவர்கள், தூத்துக்குடி.
,, S. பால்வண்ண முதலியார் அவர்கள், திருநெல்வேலி.
,, S. மெய்கண்டபிள்ளையவர்கள், நாகை.
,, M. வேலுசாமித்தேவர் அவர்கள், இராமநாதபுரம்.
,, A. T. முத்துக்குமாரசாமிச் செட்டியாரவர்கள், கூடலூர்.
,, P. L. இராமசாமி நாய்க்கர் அவர்கள், மிட்டாதார், பாகல்பட்டி.
,, K. S. P. கோடிலிங்கம் செட்டியார் அவர்கள், கும்பகோணம்.
,, K. முத்துக்கன்னிவேலுச் செட்டியாரவர்கள், வாலாஜாபாத்.
,, T. தங்கவேலு முதலியார் அவர்கள், போலாரம்.

## வனிதையர் வகுப்புக் காரியதரிசி.

ஸ்ரீமதி - ஆண்டாளம்மாள் அவர்கள், சென்னை.

---

### சைவசித்தாந்த மகாசமாஜத்தின்
### 1919-௵ டிசம்பர் 1920-௵ ஜனவரி மாதங்களின் வரவு செலவு கணக்கு.

| வரவு. | தொகை. ரூ. | அ. | ப. | செலவு. | தொகை. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| 1919௵ நவம்பர்௴ 30உ இருப்பு ... ... | 76 | 14 | 8 | விகிதர் சம்பளம் ... ... ... ... | 30 | 0 | 0 |
| சமாசிகர் வருட சந்தா ... ... | 10 | 8 | 0 | அச்சுக்கூலி ... ... ... ... | 16 | 10 | 0 |
| பழைய பிரதிகள் விற்பனை ... ... ... | 1 | 8 | 0 | தபால்செலவு முதலியன ... ... | 11 | 13 | 9 |
| புத்தக விற்பனை ... ... ... ... | 0 | 4 | 0 | காகிதம் ... ... ... ... | 28 | 0 | 0 |
| | | | | | 86 | 7 | 9 |
| | | | | ஐ[illegible] 31உ இருப்பு | *2 | 10 | 11 |
| மொத்தம் ... | 89 | 2 | 8 | மொத்தம் | [illegible] | 2 | 8 |

K. SUBRAHMANIAM, *Secretary.* C. V. JAMBULINGAM, *Treasurer.* M. MASILAMO[illegible]NY MU[illegible]

617-5-1. குறிப்பு:—* ஆயுள் சமாசிகர் சந்தா ரூ. 620-ல் ரூ. 619-5-1 செலவாயினமை சோ[illegible]

## 30 வசித்தாந்த மகாசமாஜ நிலயத்தில் கிடைக்

## அரிய நூல்கள்.

…ஞானங்கின் மூலபாடத்தை
…பள்ளேயவ நியமையாதது. சொற்பப்பிரதிக
உள.

S. சபாரத்தின முதலியார்

2. சிவப்ப…
உமாபதி …வலு முதலியார் …ளிச்செய்த சாத்திரங்களில் முதன்மை யானது. சைவசித்தாந்தை - சிவனர் முதலில் …ரம்பிப்பது. தற்காலத்திற் கேற்றவாறு இப்புத்த… …த்தெளிவாக எழுதப்பட்டுள்ளது. …வ்வொரு சைவாபிமானியும் அவசியம் வாங்கி வாசிக்கற்பாலது. விலை ரூ. 1 12 0

3. திருவருட்பயன் விளக்கவுரை.
இந்நூலும் உமாபதி சிவாசாரியர் அருளியதே. இது சைவசித்தாந் த… …பாடுகளனைத்தையும் நூறு குறட்பாவால் சுருக்கிக்கூறுவது. திருக்குறளைப்போல் சிறந்து விளங்குவது. சித்தாந்தக் கருத்துக்களை மனனஞ் செய்வதற்கேற்றவாறு அமைந்து விளங்குவது. இவ்வுரையை யாவரும் எளி தில் வாசித்தறியலாம். விலை ரூ. 0 9 0.

4. பிரபஞ்ச விசாரம்.
நாத்திகம், சாங்கியம், பௌத்தம், கிறிஸ்துமதம், மாயாவாதம் முத லிய சமயங்களின் கோட்பாடுகளைக் கண்டித்தொதுக்கி சைவசித்தாந்தத்தின் ஏற்றத்தைவிளக்கும் வசன நூல். மிக அருமையானது. விலை ரூ. 1 8 0.

5. திருப்புகழ்த்திரட்டு.
இது 150 முக்கிய திருப்புகழ்ப் பாக்களை அதிகரணங்களாக வகுக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு பாவிலும் …வேண்டிய விஷயத்தை அரும் பதவுரையில் சாத்திரப் பிரம… …க்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1 6 0.

18/7/14

6. நாவலர் சரித்திரம்.
இத்தமிழ் நாட்டின்கண் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களைப்பற் கேள்விப்படாதவர் யாவருமில்லை எனலாம். இத்தகைய பெருந்தகை ரது திவ்விய சரித்திரத்தை ஒவ்வொரு சைவரும் வாசித்தறியவேண் அத்தியாவசியமேயாம். அவர்களது திருவுருப்படமும், அவர்கள் ச சிதமாக இயற்றிய பாசுரங்களும் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டு விலை ரூபா 0 8 0.